18th July 1962]

(இ) எப்போது முதல் அமுலுக்கு வரும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) From the school year 1962–63.

திரு. க. ர. நல்லசிவம்: மாணவர்களிடையே **ஆங்கிலத்தினு**டைய தரத்தை உயர்த்துவதற்காக இந்தத் திட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறதா? அல்லது, உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்தைப் போதனை மொழியாகக் கொள்ளுவதற்கு முதற்படியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: போதனை மொழிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நம்முடைய மாணவர்கள் ஆங்கிலம் கற்பது அவசியம் என்று இந்த அரசாங்கம் உணர்கிறது, மாணவர்களும் வேண்டுகிறார்கள், பெற்றோர்களும் வேண்டுகிறார்கள். **தொடங்குவது என்றால், நான் நேற்றுக் கூறியது போல, நான்கா**வது ஸ்டாண்டர்டிலிருந்து இந்த வருஷம் தொடங்கப்படும். அடுத்த ஆண்டில் மூன்றாவது ஸ்டாண்டர்டிலிருந்து தொடங்க வேண்டுமென்பதுதான் உத்தேசம். அதுதான் ஆசிரியர்களுடைய அபிப்பிராயமும், அவர்களுடைய அனுபவமும்.

MR. SPEAKER: The hon. Member, Sri C. Chiranjeevulu Naidu.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, the question that I wanted to put has already been answered by the Hon. Minister in reply to a supplementary question put by another hon. Member. I wanted to ask whether it was a fact that the Hon. Minister had stated at a meeting in Poonamallee that English would be introduced from the Third Standard. Now this question has already been answered.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Secondary Education Teachers' Association have suggested, from out of their own experience, that teaching of English should be started from the Third Standard. I have stated that we are considering that way.

* 390 Q.—SRI M. WILLIAM: Will the Hon. the Minister for Finance be pleased to state whether instructions have been issued to start English medium classes in the High schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes. Permission has been granted for English medium in some High schools for this year.

SRI M. WILLIAM: Sir, while speaking on the Demand 'Education', the Hon. Minister has stated that the English

[18th July 1962

medium would be introduced in some of the schools in the district headquarters. May I know whether that will be extended to the schools in the taluk headquarters?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir, even in Nagercoil I think the English medium has been prescribed in some school or other.

திரு. வை. சங்கரன்: அந்த வகுப்புகளுக்கு எந்த அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? குறிப்பாக மற்ற மாகாணங்களிலிருந்து இங்கே வருகிற உத்தியோகஸ்தர்கள், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்படும் உத்தியோகஸ்தர்கள் பிள்ளைகளுக்கு, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்குக் கண்டிப்பாக இடம் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் ஏதாவது விதி பிறப்பித்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது ஒன்றுமில்லை. மாணவர்கள் வேண்டுமானால், இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதற்குரிய வகையில் சிற்சில பள்ளிக்கூடங்களில் ஒரு செக்ஷனில் ஆங்கிலம் போதனை மொழியாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. வெங்கட்டராமன்: இன்னும் அதிக உயர்நிலைப் பள்ளிகள் ஆங்கிலத்தைப் போதனைமொழியாக வைக்கவேண்டுமென்று மனுக்கள் போட்டிருப்பதாகக் கூறப்படுகிறதே? அவ்வாறு மனுக்கள் போடப்பட்டிருந்தால், இந்த ஆண்டில் இல்லையென்றாலும், அடுத்த ஆண்டிலாவது அந்தப் பள்ளிகளில் ஆங்கிலத்தைப் போதனை மொழியாக வைப்பதற்கு அனுமதி அளிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு போடப்பட்ட மனுக்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஓரளவுக்குத்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டில் மேலும் என்ன செய்வது என்பது அப்பொழுது இருக்கிற நிலைமையை ஒட்டி முடிவு செய்யவேண்டிய விஷயம்.

SRI M. WILLIAM: May I know whether the English medium would be introduced in the schools located in the taluk headquarters if there is a public demand for it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, whether it is a taluk or a district, the idea is that district headquarters should necessarily have this facility. Which school should have this medium, should depend on the position in a particular area and the demand for it.

(ஒரு கனம் அங்கத்தினர் நின்றுகொண்டே மற்றொரு கனம் அங்கத்தினரோடு பேசிக்கொண்டிருந்தார்.)

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் நின்றுகொண்டே மற்றொரு கனம் அங்கத்தினருடன் பேசுவது நல்லது அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம்.

18th July 1962]

திரு. வை. சங்கரன் : வேண்டியவர்களுக்கு இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, இருக்கிற தொகைக்கு மேல் அதிகமாக மாணவர்கள் ஆங்கில போதனை மொழியில் படிக்க விரும்பினால், இப்படிப்பட்டவர்களை அதில் சேர்க்கவேண்டும். அல்லது எந்த முறையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதுபற்றி விதிமுறை அமைக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மீண்டும் சொல்லுகிறேன். இதிலே சேர்ப்பது ஒன்றுமில்லை. இந்த வசதி அளிக்கப்படுகிறது. அந்த வசதியை வேண்டியவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

வெலிங்டன் நீர்த்தேக்கம் (மராமத்து செய்தல்)

*391 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (திரு. இரா. நாராயணன் சார்பாக) :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து வெலிங்டன் ரிசர் வாயரை (எமனேரி) மராமத்து செய்ய உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால், எப்போது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : வெலிங்டன் ரிஸர்வாயரில் அதிகமாக வண்டல் படிந்துவிட்டதினால், அந்த ஏரியில் தண்ணீர் கொள்ளாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால், சீக்கிரம் மண்ணை வாருவதற்கு உண்டான நடவடிக்கை எடுப்பார்களா ?

கனம் திரு. வி. ராமையா : அதில் ஏராளமான ஸில்டு இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனால், இந்த ரிஸர்வாயர் சம்பந்தமாக நல்ல மராமத்து வேலைகள் நடக்க வேண்டுமென்றால், இப்பொழுது இருக்கக்கூடிய நிலையிலே ஆயக் கட்டுக்குப் போதுமான அளவுக்கு தண்ணீர் கட்டியிருக்கிறது. அதோடு இல்லாமல் என்னிடம் இருக்கக்கூடிய விவரப்படி, அந்த ரிஸர்வாயர் எத்தனை ஏகருக்குப் பாசன கொடுக்கத் திட்டம் போடப்பட்டிருக்கிறதோ, அந்த ஏகரேஜ் இன்னும் பூர்த்தியாக வில்லை. இந்த ரிஸர்வாயரைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய முறையிலே எப்படி அதை முறையாக வைத்துக்கொள்ள வேண்டுமோ அதற்கு வேண்டிய கவனம் அரசாங்கம் செலுத்திக் கொண்டுதான்வருகிறது.

திரு. ர. ஜீவரத்தினம் : கனம் சபாநாயகர் அவர்களே இதிலே தமிழிலே எமனேரி என்று போட்டிருக்கிறது. இது எமன் ஏரியா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமையா : இப்பொழுது நடைமுறையில் அதற்குப் பெயர் வெலிங்டன் ரிசர்வாயர்.